

கொக்குவில் மேற்கு கொக்குவிலைப் பிறப்பிடமாகவும்
இல-59, கனகபுரம், கிளிநொச்சியை வசிப்பிடமாகவும் கொண்ட

# அமரர்

# குணரத்தினம் குணபாலசிங்கம்

அவர்களின் சிவபதப் பேறு குறித்த

## 31 ஆம் நாள் நினைவு மலர்

## 07.02.2021

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



கொக்குவில் மேற்கு கொக்குவிலைப் பிறப்பிடமாகவும்
இல-59, கனகபுரம், கிளிநொச்சியை வசிப்பிடமாகவும் கொண்ட

எங்கள் அன்புத் தெய்வம்

# குணரத்தினம் குணபாலசிங்கம்

அவர்களின் அமரத்துவம் குறித்த

# நினைவு மலர்

## 07.02.2021

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சமர்ப்பணம்

ஏற்றமிகு ஆசானாய் புண்படாது எமையெல்லாம்
போற்றி வளர்த்தீர் கண்ணூறு
பட்டது போல் காலன் கவர்ந்தானே
விண்ணுலகப் பயணத்தால் விம்முகின்றோம்.

அன்னையாய் தந்தையாய் ஆசானாய்
அரவணைத்து அறிவூட்டி
மருமனாய் மாமனாய் மழலையாய்
பாட்டனாய் பூட்டனாய்
பாரினில் எமையெல்லாம்
பக்குவப்படுத்தி பாதை வகுத்து
பண்பாளனாய் மலரிடையே மதித்து
எம் அன்புத் தெய்வத்திற்கு
இம்மலரினை சமர்பிக்கின்றோம்.

**ஓம்! சாந்தி**

**குடும்பத்தினர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்"

மண்ணில்

1947 - 11 - 03

விண்ணில்

2021 - 01 - 08



அமரர்

# குணரத்தினம் குணபாலசிங்கம்

அவர்களின்

## திதி நிர்ணயா வெண்பா

குணத்தில் சிகரமாம் குணபாலசிங்கம் என்பாற்
நிலத்தில் குளிர் பரப்பு மார்கழி – இருபத்து நான்காம் நாள்
தசமித் திதியதிலே தரணிபோற்றும் இறைவன் கருணையுடன்
ஊர் விட்டு வான்புகுந்தான் காண்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# இறை துதிப்பாக்கள்



## பஞ்ச புராணம்

### விநாயகர் துதி

வானுலகும் மண்ணுலகும் வாழ மறை வாழ
பான்மைகரு செய்ய தமிழ் பர்மிசை விளங்க
ஞானமாத ஐந்து கர முன்து விழி நால்வாய்
ஆனை முகனைப் பரவி அஞ்சலி செய்சித்பாம்

### தேவாரம்

கருவாய்க் கிடந்துன் கழுலே நினையம் கருத்துடையேன்
உருவாய்த் தெரிந்துண்தன் நாமம் பயின்றேன் உனதருளால்
திரவாய் பொலியச் சிவாய நமவென்று நீதணிந்தேன்
தருவாய் சிவகதி நி திருப்பாதிரிப் புலியூரானே

### திருவாசகம்

வெறுப்பானவே செய்யும் என் சிறுமையை நின் பெருமையினால்
பொறுப்பவனே அராப் பூண்பவனே பொங்கு கங்கைச் சடைச்
செறுப்பவ னேநின் திரவரு ளால்என் பிறவியை வேர் அறுப்பவ
னேயுடையாயடி யேனுள் இடைக்கலமே

### திருவிசைப்பா

கடியார் கணம் புல்லர் கண்ணப்பர் என்னுன்
அடியார் அமர் உலகமே ஆள நீ ஆளாதே
முடியா முத் தீவேள்வி மூவாயிரவ ரொடும்
குடி வாழ்க்கை கொண்டு நீ குலாவிக் கூத்தாடினையே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்பல்லாண்டு

சேவிக்க வந்தயன் இந்திரன்
செங்கண்மால் எங்குத்திசை திசையென
கூவிக் கவர்ந்து நெருங்கிக்
குழாங்குழா மாய் நின்று கூத்தாடும்
ஆவிக்(கு) அமுதை என் ஆர்வத்
தனத்தினை அப்பனை ஒப்பவரர்
பாவிக்கும் பாவகத்(து) அப்புறத்
தானுக்கே பல்லாண்டு கூறுதுமே

## திருப்புராணம்

நின்றாலு மிருந்தாலுங் கிடந்தாலும் நடந்தாலும்
மென்றாலுந் துயின்றாலும் விழித்தாலும் இமைத்தாலும்
மன்றாகும் மலர்பாதம் நெருகாலும் மதவானம்
குன்தாத உணர் வுடையார் தொண்டராங் குணமிக்கார்.

## திருப்புகழ்

ஆதிமுதனாலில் எந்தன் தாயுடலிலே மிருந்து
ஆகமல மாகிநின்று புவிமீதில்
ஆசையுடனே பிறந்து நேசமுடனே வளர்ந்து
ஆணழகனாகி நின்று விளையாடி
பூதல மெலா மலைந்து மாதளுடனே கலந்து
பூமி தனில் வேணுஅமன்று பொருள் தேடி
போகமதிலே உழன்று பாழழ நர தெய்தாமலுன்றன்
பூவடிகள் சேர அன்பு தருவாயே
சீதைகொடு போகுமந்த ராவணனை மாளவென்ற
தீரனரி நாரணன் மருகோனே
தேவர்முனி வோர்கள் கொண்டல் மாலரி பிரமாவுநின்று
தேட அரிதான வன்றன் முருகோனே
கோதை மலை வாழுநின்ற நாதரிட பாகம் நின்ற
கோமளிய நாதி தந்த மெரோசா
கூடிவரு சூரர் தங்கள் மார்பை இருகூறுகண்ட
கோடை நகர் வாழவந்த பெருமானே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்தள் வைக்கப் படும்

ஈன்றவள் மடியில்

1953 - 10 - 27



ஈசனின் அடியில்

2006 - 09 - 25

அமரர்

# குணபாலசிங்கம் ரதிமலர் (அல்லி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமரர் குணரத்தினம் குணபாலசிங்கம் வாழ்க்கை சரித்திரம்

எழில் கொழிக்கும் ஈழத் திருநாட்டின் வளமிகு பகுதியாம் யாழ்ப்பாணத்தில் கொக்குவில் பகுதியிலுள்ள குளப்பிட்டி எனும் ஊரில் குணரத்தினம் நல்லம்மா தம்பதிகளுக்கு இரண்டாவது மகனாக குணபாலசிங்கம் அவதரித்தார் பெற்றோரின் அரவணைப்பில் வளர்ந்து வந்த குணபாலசிங்கம் தனது கல்வியினை குளப்பிட்டியில் கற்றார் தொடர்ந்து வியாபாரத்தை மேற்கொண்டு வந்த இளைஞரான குணபாலசிங்கத்திற்கு பெற்றோரின் ஆசியுடன் ஏழாலை யாழ்ப்பாணத்தை சேர்ந்த கந்தவனம் பூரணம் தம்பதிகளின் மகளான ரதிமலரை கரம் இணைத்து வைத்தனர் இல்லறத்தில் நல்லறமாய் வாழ்தலில் சிறப்புற்ற தம்பதியர் இல்லறத்தின் பயனாக டெய்சிமலர், கார்த்திகா, எனும் பெண் பிள்ளைகளையும் குணராஜ் எனும் ஆண் பிள்ளையையும் மகவுகளாய் ஈன்றெடுத்தனர். குடும்பத்தில் மகிழ்ச்சி பொங்கி இன்புற்றிருந்த இவர்கள் கால நதிப்புரன்வில் நாட்டின் அசாதாரண நிலை இடம் பெயர்வு என பல துன்பங்களையும் தாண்டி பிள்ளைகளைக் கல்வியிலே முன்னேற்றி தம் கனவுகளை நிறைவேற்றினர் கிளிநொச்சி கனகபுரத்தில் மீள்குடியமர்ந்து மீண்டும் சொந்த ஊரில் வாழ்க்கைப் பயணம் சிறகடித்துக் கொண்டிருந்தவேளையில் குடும்பத்தில் முதலாவது மகள் டெய்சிமலருக்கு ஆனந்தராஜன் என்பவருக்கு கரம் பிடித்துக் கொடுத்தனர். இம்மகிழ்வான தருணத்தில் இரக்கமற்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடும் நோயின் தீண்டலினால் 25.09.2006 ஆம் நாளில் ஓருயிரும் ஈருடலாய் இருந்த தம்பதியனர் பிரியும் நிலை வந்தது ஆம் ரதிமலர் அவர்கள் இறைவனடி சேர்ந்தார். கவலையினால் இடிந்து போன குணபாலசிங்கம் பிள்ளைகளின் வாழ்வைக் கவனத்திற் கொண்டு கவலைகளை மறைத்து வாழ்க்கைப் பயணத்தை எதிர்கொண்டார். தொடர்ந்து இளைய மகள் கார்த்திகாவுக்கு தொடர்ந்து ஹரிகரன் என்பவரை மணமுடித்து வைத்தார்.

மகள்கள் இருவரின் பிள்ளைகளுடன் (ஆறிஸ், ஆருஜன், ஆரவின், ஆருஸ், ஆறிற், ஜாதவன், பூர்ணிஜா) மனம் மகிழ்வுடன் வாழ்ந்திருந்தபோது பொல்லாத நோய்களின் தாக்கம் காரணமாய் உடல் நலிவுற்றுப் போயிருந்த குணபாலசிங்கம் 2021.01.08 ஆம் நாள் இறைபதம் அடைந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிள்ளைகளின் பிரிவுத்துயர்

அன்பின் சிகரமாய்
பண்பில் சிறந்தவராய்
பார் போற்றும் உத்தமராய்
அருகிருந்த தந்தையே
புன்னகையைத் தினம் சுமந்து
எம் பூரிப்பை ரசித்து நின்று
மௌனமாய் மகிழ்ந்திருந்து
அமைதியாய் பேசும் நீங்கள்
எமைப் பிரிந்து
எங்கு சென்றீர்
அன்னையின் பிரிவு எமை
ஆறாத துயரில் வைத்து
அழவைத்து நிற்க...
அருகிருந்த உங்களை
கொடும் நோயின் கரங்கள்
குறை வழியில் பிரித்ததுவோ

மருமக்கள் மனத்துயர்
தந்தை போல் எமை சேர்த்து
தரமுயர் குணங்களைக் காட்டி
மாண்புயர வாழ்ந்து வந்த
மாமாவே எங்கு சென்றீர்'
மருமக்கள் என்ற போதும்
மறுமகன் என்று ஏற்றீர்
பிரிவுகள் பார்த்ததில்லை
கெடிதுல் விரைவீர் என்று
கனமேனும் நினைக்கவில்லை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பேரப்பிள்ளைகளின் பெருந்துயர்

துள்ளி விளையாடும்
துளிர்கள் எம் மீது
தூய அன்பு கொண்டு
துணையிருந்த தாத்தாவே
அள்ளி எமை எடுத்து
அரவணைப்பை தாம் கொடுத்து
எல்லாமாய் இருந்து விட்டு
எமை விட்டு எங்கு சென்றீர்....?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவபுராணம்
## திருச்சிற்றம்பலம்

நமச்சிவாய வாழ்க நாதன் தாள் வாழ்க
இமைப்பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க
கோகழி ஆண்ட குருமணிதன் தாள் வாழ்க
ஆகமம் ஆகிநின்று அண்ணிப்பான் தாள் வாழ்க
ஏகன் அநேகன் இறைவன் அடி வாழ்க

வேகம் கெடுத்துஆண்ட வேந்தன் அடி வெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்தன் பெய்கழல்கள் வெல்க
புறந்தார்க்குச் சேயோன் தன் பூங்கழல்கள் வெல்க
கரங்குவிவார் உள்மகிழும் கோன்கழல்கள் வெல்க
சிரம்குவிவார் ஓங்குவிக்கும் சீரோன் கழல் வெல்க

ஈசன் அடிபோற்றி எந்தை அடிபோற்றி
தேசன் அடிபோற்றி சிவன் சேவடி போற்றி
நேயத்தே நின்ற நிமலன் அடி போற்றி
மாயப் பிறப்பு அறுக்கும் மன்னன் அடி போற்றி
சீரார் பெருந்துறை நம் தேவன் அடி போற்றி

ஆராத இன்பம் அருளும் மலைபோற்றி
சிவன் அவன் என்சிந்தையுள் நின்ற அதனால்
அவன் அருளாலே அவன்தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவ புராணம் தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய உரைப்பன் யான்.

கண் நுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற்கு எட்டா எழிலார் கழல் இறைஞ்சி
விண் நிறைந்தும் மண் நிறைந்தும் மிக்காய் விளங்கொளியாய்
எண்ணிறந்து எல்லை இலாதானே நின் பெரும்சீர்
பொல்லா வினையேன் புகழுமாறு ஒன்றறியேன்

புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல் விருகமாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல் அசுரர் ஆகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்ற இத் தாவர சங்கமத்துள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லாப் பிறப்பும் பிறந்து இளைத்தேன் எம்பெருமான்
மெய்யே உன் பொன் அடிகள் கண்டு இன்று வீடு உற்றேன்
உய்ய என் உள்ளத்துள் ஓங்காரமாய் நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா எனவோங்கி ஆழ்ந்து அகன்ற நுண்ணியனே

வெய்யாய் தணியாய் இயமான னாம்விமலா
பொய் ஆயின எல்லாம் போய் அகல வந்தருளி
மெய் ஞானம் ஆகி மிளிர் கின்ற மெய்ச் சுடரே
எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல் அறிவே

ஆக்கம் அளவு இறுதி இல்லாய் அனைத்து உலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள் தருவாய்
போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின் தொழும்பின்
நாற்றத்தின் நேரியாய் சேயாய் நணியானே
மாற்றம் மனம் கழிய நின்ற மறையோனே

கறந்த பால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேன்ஊறி நின்று
பிறந்த பிறப்பு அறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்கள் ஓர் ஐந்து உடையாய் விண்ணோர்கள் ஏத்த
மறைந்திருந்தாய் எம்பெருமான் வல்வினையேன் தன்னை

மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவம் என்னும் அரும் கயிற்றால் கட்டி
புறம்தோல் போர்த்து எங்கும் புழு அழுக்கு மூடி
மலம் சோரும் ஒன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலன் ஐந்தும் வஞ்சனையைச் செய்ய

விலங்கு மனத்தால் விமலா உனக்குக்
கலந்த அன்பாகிக் கசிந்து உள் உருகும்
நலம் தான் இலாத சிறியேற்கு நல்கி
நிலம் தன்மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்

தாயிற் சிறந்த தயாவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேனார் அமுதே சிவபுரானே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள்புரிந்து நெஞ்சில் வஞ்சம் கெடப்

பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா அமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதார் உள்ளத்து ஒளிக்கும் ஒளியானே
நீராய் உருக்கி என் ஆருயிராய் நின்றானே
இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே

அன்பருக்கு அன்பனே யாவையுமாய் இல்லையுமாய்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே
ஈர்த்து என்னை ஆட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்த மெய் ஞானத்தால் கொண்டு உணர்வார் தம்கருத்தின்

நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வும் இலாப் புண்ணியனே
காக்கும் என் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தா மிக்காய் நின்ற
தோற்றச் சுடர் ஒளியாய்ச் சொல்லாத நுண்ணுணர்வாய்

மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்து அறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவே என் சிந்தனை உள்
ஊற்றான உண்ணார் அமுதே உடையானே
வேற்று விகார விடக்கு உடம்பின் உள்கிடப்ப
ஆற்றேன் எம் ஐயா அரனே ஓ என்றென்று

போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய் ஆனார்
மீட்டு இங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பைக் கட்டழிக்க வல்லானே
நள் இருளில் நட்டம் பயின்று ஆடும் நாதனே
தில்லை உள் கூத்தனே தென்பாண்டி நாட்டானே

அல்லல் பிறவி அறுப்பானே ஓ என்று
சொல்லற்கு அரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்
சொல்லிய பாட்டின் பொருள் உணர்ந்து சொல்லுவார்

செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவன் அடிக்கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருச்சிற்றம்பலம்

# திருப்பொற்சுண்ணம்

முத்துநல்தாழம்பூமாலைதூக்கி
முளைக்குடந்தூபம்நல்தீபம்வைம்மின்
சக்தியும்சோமியும்பார்மகளும்
நாமகளோடுபல்லாண்டிசைமின்
சித்தியுங்கௌரியும்பார்ப்பதியும்
கங்கையும்வந்துகவரிகொண்மின்
அத்தன்ஐயாறன்அம்மானைபாடி
ஆடப்பொற்சுண்ணம்இடித்துநாமே.

பூவியல்வார்சடைஎம்பிராற்குப்
பொற்றிருச்சுண்ணம்இடிக்கவேண்டும்
மாவின்வடுவகிரன்னகண்ணீர்
வம்மின்கள்வந்துடன்பாடுமின்கள்
கூவுமின்தொண்டர்புறநிலாமே
குனிமின்தொழுமினெங்கோனெங்கூத்தன்
தேவியுந்தானும்வந்தெம்மையாளச்
செம்பொன்செய்சுண்ணம்இடித்துநாமே.

சுந்தரநீறணிந்தும்மெழுகித்
தூயபொன்சிந்திநிதிபரப்பி
இந்திரன்கற்பகம்நாட்டியெங்கும்
எழிற்சுடர்வைத்துக்கொடியெடுமின்
அந்தார்கோன்அயன்தன்பெருமான்
ஆழியான்நாதன்நல்வேலன்தாதை
எந்தரம்ஆளுமையாள்கொழுநற்
கேய்ந்தபொற்சுண்ணம் இடித்துநாமே.

காசணிமின்கள்உலக்கையெல்லாம்
காம்பணிமின்கள்கறையுரலை
நேசமுடையஅடியவர்கள்
நின்றுநிலாவுகஎன்றுவாழ்த்தித்
தேசமெல்லாம்புகழ்ந்தாடுங்கச்சித்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவேகம்பன்செம்பொற்கோயில்பாடிப்
பாசவினையைப்பறிந்துநின்று
பாடிப்பொற்சுண்ணம்இடித்துநாமே.

அறுகெடுப்பார்அயனும்அரியும்
அன்றிமற்றிந்திரனோடமரர்
நறுமுதுதேவர்கணங்களெல்லாம்
நம்மிற்பின்பல்லதெடுக்கவொட்டோம்
செறிவுடைமும்மதில்எய்தவில்லி
திருவேகம்பன்செம்பொற்கோயில்பாடி
முறுவற்செவ்வாயினீர்முக்கணப்பற்
காடப்பொற்சுண்ணம் இடித்துநாமே.

உலக்கைபலஓச்சுவார்பெரியர்
உலகமெலாம்உரல்போதாதென்றே
கலக்கஅடியவர்வந்துநின்றார்
காணஉலகங்கள்போதாதென்றே
நலக்கஅடியோமைஆண்டுகொண்டு
நாண்மலர்ப்பாதங்கள்சூடந்தந்த
மலைக்குமருகனைப்பாடிப்பாடிமகிழ்ந்து
பொற்சுண்ணம்இடிந்தும்நாமே.

சூடகந்தோள்வரைஆர்ப்பஆர்ப்பத்
தொண்டர்குழாமெழுந்தார்ப்பஆர்ப்ப
நாடவர்நந்தம்மைஆர்ப்பஆர்ப்ப
நாமும்அவர்தம்மைஆர்ப்பஆர்ப்பப்
பாடகமெல்லடியார்க்குமங்கை
பங்கினன்எங்கள்பராபரனுக்கு
ஆடகமாமலைஅன்னகோவுக்

காடப்பொற்சுண்ணம்இடித்தும்நாமே.
வாள்தடங்கண்மடமங்கைநல்லீர்
வரிவளைஆர்ப்பவண்கொங்கைபொங்கத்
தோள்திருமுண்டந்துதைந்திலங்கச்
சோத்தெம்பிரானென்றுசொல்லிச்சொல்லி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்கொண்டநாண்மலர்ப்பாதங்காட்டி
நாயிற்கடைப்பட்டநம்மையிம்மை
ஆட்கொண்டவண்ணங்கள்பாடிப்பாடி
ஆடப்பொற்சுண்ணம்இடித்தும்நாமே.

வையகம்எல்லாம்உரலதாக
மாமேருஎன்னும்உலக்கைநாட்டி
மெய்யனும்மஞ்சள்நிறையஅட்டி
மேதருதென்னன்பெருந்துறையான்
செய்யதிருவடிபாடிப்பாடிச்
செம்பொன்உலக்கைவலக்கைபற்றி
ஐயன்அணிதில்லைவாணனுக்கே
ஆடப்பொற்சுண்ணம்இடித்தும்நாமே.

முத்தணிகொங்கைகள்ஆடஆட
மொய்குழல்வண்டினம்ஆடஆடச்
சித்தஞ்சிவனொடும்ஆடஆடச்
செங்கயற்கண்பனிஆடஆடப்
பித்தெம்பிரானொடும்ஆடஆடப்
பிறவிபிறரொடும்ஆடஆட
அத்தன்கருணையொடாடஆட
ஆடப்பொற்சுண்ணம்இடித்தும்நாமே.

மாடுநகைவாள்நிலாவெறிப்ப
வாய்திறந்தம்பவளந்துடிப்பப்
பாடுமின்நந்தம்மைஆண்டவாறும்
பணிகொண்டவண்ணமும்பாடிப்பாடித்
தேடுமின்எம்பெருமானைத்தேடி
சித்தங்களிப்பத்திகைத்துத்தேறி
ஆடுமின்அம்பலத்தாடினானுக்

காடப்பொற்சுண்ணம்இடித்தும்நாமே.
மையமர்கண்டனைவானநாடர்
மருந்தினைமாணிக்கக்கூத்தன்தன்னை
ஐயனைஐயர்பிரானைநம்மை
அகப்படுத்தாட்கொண்டருமைகாட்டும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொய்யர்தம்பொய்யனைமெய்யர்மெய்யைப்
போதரிக்கண்ணிணைப்பொற்றொடித்தோள்
பையரவல்குல்மடந்தைநல்லீர்
பாடிப்பொற்சுண்ணம்இடித்தும்நாமே.

மின்னிடைச்செந்துவர்வாய்க்கருங்கண்
வெண்ணகைப்பண்ணமர்மென்மொழியீர்
என்னுடைஆரமுதெங்களப்பன்
எம்பெருமான்இமவான்மகட்குத்
தன்னுடைக்கேள்வன்மகன்தகப்பன்
தமையன் எம் ஐயன்தாள்கள்பாடிப்
பொன்னுடைப்பூண்முலைமங்கைநல்லீர்
பொற்றிருச்சுண்ணம்இடித்தும்நாமே.

சங்கம்அரற்றச்சிலம்பொலிப்பத்
தாழ்குழல்சூழ்தருமாலையாடச்
செங்கனிவாயிதழுந்துடிப்பச்
சேயிழையீர்சிவலோகம்பாடிக்
கங்கைஇரைப்பஅராஇரைக்குங்
கற்றைச்சடைமுடியான்கழற்கே
பொங்கியகாதலிற்கொங்கைபொங்கப்
பொற்றிருச்சுண்ணம்இடித்தும்நாமே.

ஞானக்கரும்பின்தெளியைப்பாகை
நாடற்கரியநலத்தைநந்தாத்
தேனைப்பழச்சுவைஆயினானைச்
சித்தம்புகுந்துதித்திக்கவல்ல
கோனைப்பிறப்பறுத்தாண்டுகொண்ட
கூத்தனைநாத்தழும்பேறவாழ்த்திப்
பானல்தடங்கண்மடந்தைநல்லீர்
பாடிப்பொற்சுண்ணம்இடித்தும்நாமே.

ஆவகைநாமும்வந்தன்பர்தம்போ
டாட்செய்யும்வண்ணங்கள்பாடிவிண்மேல்
தேவர்கனாவிலுங்கண்டறியாச்
செம்மலர்ப்பாதங்கள்காட்டுஞ்செல்வச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேவகம்ஏந்தியவெல்கொடியான்
சிவபெருமான்புரஞ்செற்றகொற்றச்
சேவகன்நாமங்கள்பாடிப்பாடிச்
செம்பொன்செய்சுண்ணம் இடித்தும்நாமே.

தேனகமாமலர்க்கொன்றைபாடிச்
சிவபுரம்பாடித்திருச்சடைமேன்
வானகமாமதிப்பிள்ளைபாடி
மால்விடைபாடிவலக்கையேந்தும்
ஊனகமாமழுச்சூலம்பாடி
உம்பரும்இம்பரும்உய்யஅன்று
போனகமாகநஞ்சுண்டல்பாடிப்
பொற்றிச்சுண்ணம்இடித்தும்நாமே.

அயன்தலைகொண்டுசெண்டாடல்பாடி
அருக்கன்எயிறுபறித்தல்பாடி
கயந்தனைக்கொன்றுரிபோர்த்தல்பாடிக்
காலனைக்காலால்உதைத்தல்பாடி
இயைந்தனமுப்புரம்எய்தல்பாடி
ஏழைஅடியோமைஆண்டுகொண்ட
நயந்தனைப்பாடிநின்றாடியாடி
நாதற்குச்சுண்ணம்இடித்தும்நாமே.

வட்டமலர்க்கொன்றைமாலைபாடி
மத்தமும்பாடிமதியம்பாடிச்
சிட்டர்கள்வாழுந்தென்தில்லைபாடிச்
சிற்றம்பலத்தெங்கள்செல்வம்பாடிக்
கட்டியமாசுணக்கச்சைப்பாடிக்
கங்கணம்பாடிக்கவித்தகைம்மேல்
இட்டுநின்றாடும்அரவம்பாடி
ஈசற்குச்சுண்ணம்இடித்தும்நாமே

வேதமும்வேள்வியும்ஆயினார்க்கு
மெய்ம்மையும்பொய்ம்மையும்ஆயினார்க்குச்
சோதியமாய்இருள்ஆயினார்க்குத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துன்பமுமாய்இன்பம்ஆயினார்க்குப்
பாதியுமாய்முற்றும்ஆயினார்க்குப்
பந்தமுமாய்வீடும்ஆயினார்க்கு
ஆதியும்அந்தமும்ஆயினார்க்கு
ஆடப்பொற்சுண்ணம்இடித்தும்நாமே.

## திருவெம்பாவை

ஆதியும்அந்தமும்இல்லாஅரும்பெருஞ்
சோதியையாம்பாடக்கேட்டேயும்வாள்தடங்கண்
மாதேவளருதியோவன்செவியோநின்செவிதான்
மாதேவன்வார்கழல்கள்வாழ்த்தியவாழ்த்தொலிபோய்
வீதிவாய்க்கேட்டலுமேவிம்மிவிம்மிமெய்ம்மறந்து
போதார்அமளியின்மேல்நின்றும்புரண்டிங்ஙன்
ஏதேனும்ஆகாள்கிடந்தாள்என்னேஎன்னே
ஈதேஎந்தோழிபரிசேலோர்எம்பாவாய்

பாசம்பரஞ்சோதிக்கென்பாய்இராப்பகல்நாம்
பேசும்போதெப்போதிப்போதார்அமளிக்கே
நேசமும்வைத்தனையோநேரிழையாய்நேரிழையீர்
சீசிஇவையுஞ்சிலவோவிளையாடி
ஏசும்இடமீதோவிண்ணோர்கள்ஏத்துதற்குக்
கூசுமலர்ப்பாதந்தந்தருளவந்தருளும்
தேசன்சிவலோகன்தில்லைச்சிற்றம்பலத்துள்
ஈசனார்க்கன்பார்யாம்ஆரேலோர்எம்பாவாய்

முத்தன்னவெண்நகையாய்முன்வந்தெதிர்எழுந்தென்
அத்தன்ஆனந்தன்அமுதன்என்றள்ளூறித்
தித்திக்கப்பேசுவாய்வந்துன்கடைதிறவாய்
பத்துடையீர்ஈசன்பழவடியீர்பாங்குடையீர்
புத்தடியோம்புன்மைதீர்த்தாட்கொண்டாற்பொல்லாதோ
எத்தோநின்அன்புடைமைஎல்லோம்அறியோமோ
சித்தம்அழகியார்பாடாரோநம்சிவனை

இத்தனையும்வேண்டும்எமக்கேலோர்எம்பாவாய்
ஒண்ணித்திலநகையாய்இன்னம்புலர்ந்தின்றோ
வண்ணக்கிளிமொழியார்எல்லோரும்வந்தாரோ
எண்ணிக்கொடுள்ளவாசொல்லுகோம்அவ்வளவும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணைத்துயின்றவமேகாலத்தைப்போக்காதே
விண்ணுக்கொருமருந்தைவேதவிழுப்பொருளைக்
கண்ணுக்கினியானைப்பாடிக்கசிந்துள்ளம்
உள்நெக்குநின்றுருகயாமாட்டோம்நீயேவந்து
எண்ணிக்குறையில்துயிலேலோர்எம்பாவாய்

மாலறியாநான்முகனும்காணாமலையினைநாம்
போலறிவோம்என்றுள்ளபொக்கங்களேபேசும்
பாலூறுதேன்வாய்ப்படிறீகடைதிறவாய்
ஞாலமேவிண்ணேபிறவேஅறிவரியான்
கோலமும்நம்மைஆட்கொண்டருளிகோதாட்டுஞ்
சீலமும்பாடிச்சிவனேசிவனேஎன்று
ஓலம்இடினும்உணராய்உணராய்காண்
ஏலக்குழலிபரிசேலோர்எம்பாவாய்

மானேநீநென்னலைநாளைவந்துங்களை
நானேஎழுப்புவன்என்றலும்நாணாமே
போனதிசைபகராய்இன்னம்புலர்ந்தின்றோ
வானேநிலனேபிறவேஅறிவரியான்
தானேவந்தெம்மைத்தலையளித்தாட்கொண்டருளும்
வான்வார்கழல்பாடிவந்தோர்க்குன்வாய்திறவாய்
ஊனேஉருகாய்உனக்கேஉறும்எமக்கும்
ஏனோர்க்குந்தங்கோனைப்பாடேலோர்எம்பாவாய்

அன்னேஇவையுஞ்சிலவோபலஅமரர்
உன்னற்கரியான்ஒருவன்இருஞ்சீரான்
சின்னங்கள்கேட்பச்சிவன்என்றேவாய்திறப்பாய்
தென்னாஎன்னாமுன்னம்தீசேர்மெழுகொப்பாய்
என்னானைஎன்அரையன்இன்னமுதென்றெல்லோமுஞ்
சொன்னோங்கேல்வெவ்வேறாய்இன்னந்துயிலுதியோ
வன்னெஞ்சப்பேதையர்போல்வாளாகிடத்தியால்
என்னேதுயிலின்பரிசேலோர்எம்பாவாய்

கோழிசிலம்பச்சிலம்புங்குருகெங்கும்
ஏழில்இயம்பஇயம்பும்வெண்சங்கெங்கும்
கேழில்பரஞ்சோதிகேழில்பரங்கருணை
கேழில்விழுப்பொருள்கள்பாடினோங்கேட்டிலையோ
வாழியீதென்னஉறக்கமோவாய்திறவாய்
ஆழியான்அன்புடைமைஆமாறும்இவ்வாறோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊழிமுதல்வனாய்நின்றஒருவனை
ஏழைபங்காளனையேபாடேலோர்எம்பாவாய்

முன்னைப்பழம்பொருட்கும்முன்னைப்பழம்பொருளே
பின்னைப்புதுமைக்கும்பேர்த்தும்அப்பெற்றியனே
உன்னைப்பிரானாகப்பெற்றவுன்சீரடியோம்
உன்னடியார்தாள்பணிவோம்ஆங்கவர்க்கேபாங்காவோம்
அன்னவரேஎங்கணவர்ஆவார்அவர்உகந்து
சொன்னபரிசேதொழும்பாய்ப்பணிசெய்வோம்
இன்னவகையேஎமக்கெங்கோன்நல்குதியேல்
என்னகுறையும்இலோமேலோர்எம்பாவாய்

பாதாளம்ஏழினுங்கீழ்சொற்கழிவுபாதமலர்
போதார்புனைமுடியும்எல்லாப்பொருள்முடிவே
பேதைஒருபால்திருமேனிஒன்றல்லன்
வேதமுதல்விண்ணோரும்மண்ணுந்துதித்தாலும்
ஓதஉலவாஒருதோழன்தொண்டருளன்
கோதில்குலத்தரன்தன்கோயிற்பிணாப்பிள்ளைகாள்
ஏதவன்ஊர்ஏதவன்பேர்ஆர்உற்றார்ஆர்அயலார்
ஏதவனைப்பாடும்பரிசேலார்எம்பாவாய்

மொய்யார்தடம்பொய்கைபுக்குமுகேரென்னக்
கையாற்குடைந்துகுடைந்துன்கழல்பாடி
ஐயாவழியடியோம்வாழ்ந்தோங்காண்ஆரழல்போற்
செய்யாவெண்ணீறாடிசெல்வாசிறுமருங்குல்
மையார்தடங்கண்மடந்தைமணவாளா
ஐயாநீஆட்கொண்டருளும்விளையாட்டின்
உய்வார்கள்உய்யும்வகையெல்லாம்உயர்ந்தொழிந்தோம்
எய்யாமற்காப்பாய்எமைஏலோர்எம்பாவாய்

ஆர்த்தபிறவித்துயர்கெடநாம்ஆர்த்தாடும்
தீர்த்தன்நற்றில்லைசிற்றம்பலத்தேதீயாடும்
கூத்தன்இவ்வானும்குவலயமும்எல்லோமும்

காத்தும்படைத்தும்கரந்தும்விளையாடி
வார்த்தையும்பேசிவளைசிலம்பவார்கலைகள்
ஆர்ப்பரவம்செய்யஅணிகுழல்மேல்வண்டார்ப்ப
பூத்திகழும்பொய்கைகுடைந்துடையான்பொற்பாதம்
ஏத்திஇருஞ்சுனைநீராடேலோர்எம்பாவாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பைங்குவளைக்கார்மலராற்செங்கமலப்பைம்போதால்
அங்கம்குருகினத்தார்பின்னும்அரவத்தால்
தங்கள்மலம்கழுவுவார்வந்துசார்தலினால்
எங்கள்பிராட்டியும்எங்கோனும்போன்றிசைந்த
பொங்குமடுவிற்புகப்பாய்ந்துபாய்ந்துநஞ்
சங்கஞ்சிலம்பச்சிலம்புகலந்தார்ப்பக்
கொங்கைகள்பொங்கக்குடையும்புனல்பொங்கப்
பங்கயப்பூம்புனல்பாய்ந்தாடேலோர்எம்பாவாய்

காதார்குழையாடப்பைம்பூண்கலனாடக்
கோதைகுழலாடவண்டின்குழாமாடச்
சீதப்புனலாடிச்சிற்றம்பலம்பாடி
வேதப்பொருள்பாடிஅப்பொருளாமாபாடிச்
சோதிதிறம்பாடிச்சூழ்கொன்றைத்தார்பாடி
ஆதிதிறம்பாடிஅந்தமாமாபாடிப்
பேதித்துநம்மைவளர்த்தெடுத்தபெய்வளைதன்
பாதத்திறம்பாடிஆடேலோர்எம்பாவாய்

ஓரொருகால்எம்பெருமான்என்றென்றேநம்பெருமான்
சீரொருகால்வாயோவாள்சித்தங்களிகூர
நீரொருகால்ஓவாநெடுந்தாரைகண்பனிப்பப்
பாரொருகால்வந்தனையாள்விண்ணோரைத்தான்பணியாள்
பேரரையர்க்கிங்ஙனேபித்தொருவர்ஆமாறும்
ஆரொருவர்இவ்வண்ணம்ஆட்கொள்ளும்வித்தகர்தாள்
வாருருவப்பூண்முலையீர்வாயாரநாம்பாடி
ஏருருவப்பூம்புனல்பாய்ந்துஆடேலோர்எம்பாவாய்

செங்கணவன்பால்திசைமுகன்பால்தேவர்கள்பால்
எங்கும்இலாதோர்இன்பம்நம்பாலதாக்
கொங்குண்கருங்குழலிநந்தம்மைக்கோதாட்டி
இங்குநம்இல்லங்கள்தோறும்எழுந்தருளிச்
செங்கமலப்பொற்பாதந்தந்தருளுஞ்சேவகனை
அங்கண்அரசைஅடியோங்கட்காரமுதை

நங்கள்பெருமானைப்பாடிநலந்திகழப்
பங்கயப்பூம்புனல்பாய்ந்துஆடேலோர்எம்பாவாய்
முன்னிக்கடலைச்சுருக்கிஎழுந்துடையாள்
என்னத்திகழ்ந்தெம்மைஆளுடையாள்இட்டிடையின்
மின்னிப்பொலிந்தெம்பிராட்டிதிருவடிமேற்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொன்னஞ்சிலம்பிற்சிலம்பித்திருப்புருவம்
என்னச்சிலைகுலவிநந்தம்மைஆளுடையாள்
தன்னிற்பிரிவிலாஎங்கோமான்அன்பர்க்கு
முன்னிஅவள்நமக்குமுன்சுரக்கும்இன்னருளே
என்னப்பொழியாய்மழையேலோர்எம்பாவாய்

அண்ணாமலையான்அடிக்கமலம்சென்றிறைஞ்சும்
விண்ணோர்முடியின்மணித்தொகைவீறற்றார்போல்
கண்ணார்இரவிகதிர்வந்துகார்கரப்பத்
தண்ணார்ஒளிமழுங்கித்தாரகைகள்தாமகலப்
பெண்ணாகிஆணாய்அலியாய்ப்பிறங்கொளிசேர்
விண்ணாகிமண்ணாகிஇத்தனையும்வேறாகிக்
கண்ணார்அமுதமாய்நின்றான்கழல்பாடிப்
பெண்ணேஇப்பூம்புனல்பாய்ந்துஆடேலோர்எம்பாவாய்

உங்கையிற்பிள்ளைஉனக்கேஅடைக்கலம்என்று
அங்கப்பழஞ்சொற்புதுக்கும்எம்அச்சத்தால்
எங்கள்பெருமான்உனக்கொன்றுரைப்போம்கேள்
எங்கொங்கைநின்அன்பர்அல்லார்தோள்சேரற்க
எங்கைஉனக்கல்லாதெப்பணியுஞ்செய்யற்க
கங்குல்பகல்எங்கண்மற்றொன்றுங்காணற்க
இங்கிப்பரிசேஎமக்கெங்கோன்நல்குதியேல்
எங்கெழிலென்ஞாயிறுஎமக்கேலோர்எம்பாவாய்

போற்றிஅருளுகநின்ஆதியாம்பாதமலர்
போற்றிஅருளுகநின்அந்தமாஞ்செந்தளிர்கள்
போற்றியெல்லாவுயிர்க்கும்தோற்றமாம்பொற்பாதம்
போற்றியெல்லாவுயிர்க்கும்போகமாம்பூங்கழல்கள்
போற்றியெல்லாவுயிர்க்கும்ஈறாம்இணையடிகள்
போற்றிமால்நான்முகனுங்காணாதபுண்டரிகம்
போற்றியாம்உய்யஆட்கொண்டருளும்பொன்மலர்கள்
போற்றியாம்மார்கழிநீர்ஆடேலோர்எம்பாவாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கந்தசஷ்டிகவசம்

காப்பு

துதிப்போர்க்கு வல்வினை போம்; துன்பம்போம்; நெஞ்சில்
பதிப்போர்க்குச் செல்வம் பலித்துக்-கதித்தோங்கும்
நிஷ்டையுங் கைகூடும், நிமலரருள் கந்தர்
சஷ்டி கவசம் தனை.

அமர ரிடர்தீர அமரம் புரிந்த
குமரனடி நெஞ்சே குறி.
கந்த சஷ்டி கவசம் பாடல் வரிகள்

சஷ்டியை நோக்கச் சரவண பவனார்
சிஷ்டருக் குதவும் செங்கதிர் வேலோன்
பாதம் இரண்டில் பன்மணிச் சதங்கை
கீதம் பாடக் கிண்கிணி யாட

மையல் நடனஞ்செய்யும் மயில்வா கனனார்
கையில் வேலால் எனைக் காக்கவென் றுவந்து
வரவர வேலா யுதனார் வருக
வருக வருக மயிலோன் வருக

ஆறுமுகம் படைத்த ஐயா வருக
நீறிடும் வேலவன் நித்தம் வருக
சிரகிரி வேலவன் சீக்கிரம் வருக!
சரவண பவனார் சடுதியில் வருக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரஹண பவச ர ர ர ர ர ர ர
ரிஹண பவச ரி ரி ரி ரி ரி ரி ரி
விநபவ சரஹண வீரா நமோநம
நிபவ சரஹண நிறநிற நிறென

வசர வணப வருக வருக
அசுரர் குடிகெடுத்த ஐயா வருக
என்னை ஆளும் இளையோன் கையில்
பன்னிரண் டாயுதம் பாசாங் குசமும்

பரந்த விழிகள் பன்னிரண் டிலங்க
விரைந்தெனைக் காக்க வேலோன் வருக
ஐயும் கிலியும் அடைவுடன் சவ்வும்
உய்யொளி சௌவும் உயிரையும் கிலியும்
கிலியுஞ் சௌவும் கிளரொளி யையும்
நிலைபெற் றென்முன் நித்தமும் ஒளிரும்
சண்முகன் நீயும் தனியொளி யொவ்வும்
குண்டலி யாம்சிவ குகன் தினம் வருக!

ஆறு முகமும் அணிமுடி ஆறும்
நீறிடு நெற்றியில் நீண்ட புருவமும்
பன்னிரு கண்ணும் பவளச்செவ் வாயும்
நன்னெறி நெற்றியில் நவமணிச் சுட்டியும்

ஈராறு செவியில் இலகுகுண் டலமும்
ஆறிரு திண்புயத் தழகிய மார்பில்
பல்பூ ஷணமும் பதக்கமும் தரித்து
நன்மணி பூண்ட நவரத்ன மாலையும்

முப்புரி நூலும் முத்தணி மார்பும்
செப்பழ குடைய திருவயி றுந்தியும்
துவண்ட மருங்கில் சுடரொளிப் பட்டும்
நவரத்தினம் பதித்த நற்சீ ராவும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருதொடை யழகும் இணைமுழந் தாளும்
திருவடி யதனில் சிலம்பொலி முழங்க
செககண செககண செககண செகண
மொகமொக மொகமொக மொகமொக மொகென

நகநக நகநக நகநக நகென
டிகுகுண டிகுடிகு டிகுகுண டிகுண
ரரரர ரரரர ரரரர ரரர
ரிரிரிரி ரிரிரிரி ரிரிரிரி ரிரிரி

டுடுடுடு டுடுடுடு டுடுடுடு டுடுடு
டகுடகு டிகுடிகு டங்கு டிங்குகு
விந்து விந்து மயிலோன் விந்து
முந்து முந்து முருகவேள் முந்து

என்றனை யாளும் ஏரகச் செல்வ
மைந்தன் வேண்டும் வரமகிழ்ந் துதவும்
லாலா லாலா லாலா வேசமும்
லீலா லீலா லீலா விநோ தனென்று

உன் திருவடியை உறுதியென் றெண்ணும்
எந்தலை வைத்துன் இணையடி காக்க
என்னுயிர்க் குயிராம் இறைவன் காக்க
பன்னிரு விழியால் பாலனைக் காக்க

அடியேன் வதனம் அழகுவேல் காக்க
பொடிபுனை நெற்றியைப் புனிதவேல் காக்க
கதிர்வேல் இரண்டும் கண்ணினைக் காக்க
விழி செவி இரண்டும் வேலவர் காக்க

நாசிகளி ரண்டும் நல்வேல் காக்க
பேசிய வாய்தனைப் பெருவேல் காக்க
முப்பத் திருபல் முனைவேல் காக்க
செப்பிய நாவைச் செவ்வேல் காக்க

கன்னமி ரண்டும் கதிர்வேல் காக்க
என்னிளங் கழுத்தை இனியவேல் காக்க
மார்பை ரத்ன வடிவேல் காக்க
சேரிள முலைமார் திருவேல் காக்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடிவே லிருதோள் வளம்பெறக் காக்க
பிடரிக ளிரண்டும் பெருவேல் காக்க
அழகுடன் முதுகை அருள்வேல் காக்க
பழுபதி னாறும் பருவேல் காக்க

வெற்றிவேல் வயிற்றை விளங்கவே காக்க
சிற்றிடை யழகுறச் செவ்வேல் காக்க
நாணாங் கயிற்றை நல்வேல் காக்க
ஆண்பெண் குறிகளை அயில்வேல் காக்க

பிட்ட மிரண்டும் பெருவேல் காக்க
வட்டக் குதத்தை வடிவேல் காக்க
பணைத் தொடை இரண்டும் பருவேல் காக்க
கணைக்கால் முழந்தாள் கதிர்வேல் காக்க

ஐவிரல் அடியினை அருள்வேல் காக்க
கைகளி ரண்டும் கருணைவேல் காக்க
முன்கையி ரண்டும் முரண்வேல் காக்க
பின்கையி ரண்டும் பின்னவள் இருக்க

நாவில் சரஸ்வதி நற்றுணை யாக
நாபிக் கமலம் நல்வேல் காக்க
முப்பால் நாடியை முனைவேல் காக்க
எப்பொழு தும்எனை எதிர்வேல் காக்க

அடியேன் வசனம் அசைவுள நேரம்
கடுகவே வந்து கனகவேல் காக்க
வரும்பகல் தன்னில் வச்சிரவேல் காக்க
அரையிருள் தன்னில் அனையவேல் காக்க

ஏமத்தில் சாமத்தில் எதிர்வேல் காக்க
தாமதம் நீக்கிச் சதுர்வேல் காக்க
காக்க காக்க கனகவேல் காக்க
நோக்க நோக்க நொடியில் நோக்க

தாக்க தாக்க தடையறக் தாக்க
பார்க்க பார்க்க பாவம் பொடிபட
பில்லி சூனியம் பெரும்பகை அகல
வல்ல பூதம் வலாட்டிகப் பேய்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லற் படுத்தும் அடங்கா முனியும்
பிள்ளைகள் தின்னும் புழக்கடை முனியும்
கொள்ளிவாய்ப் பேய்களும், குறளைப் பேய்களும்
பெண்களைத் தொடரும் பிரமராட் சதரும்

அடியனைக் கண்டால் அலறிக் கலங்கிட
இரிசு காட்டேரி இத்துன்ப சேனையும்
எல்லிலும் இருட்டிலும் எதிர்ப்படும் அண்ணரும்
கனபூசை கொள்ளும் காளியோ டனைவரும்

விட்டாங் காரரும் மிகுபல பேய்களும்
தண்டியக் காரரும் சண்டாளர் களும்
என்பெயர் சொல்லவும் இடிவிழுந் தோடிட
ஆனை யடியினில் அரும்பா வைகளும்

பூனை மயிரும் பிள்ளைகள் என்பும்
நகமும் மயிரும் நீள்முடி மண்டையும்
பாவைக ளுடனே பலகல சத்துடன்
மனையிற் புதைத்த வஞ்சனை தனையும்

ஒட்டியச் செருக்கும் ஒட்டிய பாவையும்
காசும் பணமும் காவுடன் சோறும்
ஓதும் அஞ்சனமும் ஒருவழிப் போக்கும்
அடியனைக் கண்டால் அலைந்து குலைந்திட

மாற்றார் வஞ்சகர் வந்து வணங்கிட
காலதூ தாளெனைக் கண்டாற் கலங்கிட
அஞ்சி நடுங்கிட அரண்டு புரண்டிட
வாய்விட் டலறி மதிகெட் டோட

படியினில் முட்ட பாசக் கயிற்றால்
கட்டுடன் அங்கம் கதறிடக் கட்டு
கட்டி உருட்டு கைகால் முறிய
கட்டு கட்டு கதறிடக் கட்டு

முட்டு முட்டு முழிகள் பிதுங்கிட
செக்கு செக்கு செதில் செதிலாக
சொக்கு சொக்கு சூர்ப்பகைச் சொக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குத்து குத்து கூர்வடி வேலால்
பற்று பற்று பகலவன் தணலெரி
தணலெரி தணலெரி தணலது வாக
விடு விடு வேலை வெகுண்டது வோடப்

புலியும் நரியும் புன்னரி நாயும்
எலியும் கரடியும் இனித் தொடர்ந் தோட
தேளும் பாம்பும் செய்யான் பூரான்
கடிவிட விஷங்கள் கடித்துய ரங்கம்

ஏறிய விஷங்கள் எளிதுடன் இறங்க
ஒளிப்புஞ் சுளுக்கும் ஒருதலை நோயும்
வாதஞ் சயித்தியம் வலிப்புப் பித்தம்
சூலைசயங் குன்மம் சொக்குச் சிரங்கு

குடைச்சல் சிலந்தி குடல்விப் பிரிதி
பக்கப் பிளவை படர்தொடை வாழை
கடுவன் படுவன் கைத்தாள் சிலந்தி
பற்குத் தரணை பருஅரை யாப்பும்

எல்லாப் பிணியும் என்றனைக் கண்டால்
நில்லா தோட நீஎனக் கருள்வாய்
ஈரேழு உலகமும் எனக் குறவாக
ஆணும் பெண்ணும் அனைவரும் எனக்கா

மண்ணா ளரசரும் மகிழ்ந்துற வாகவும்
உன்னைத் துதிக்க உன் திரு நாமம்
சரவண பவனே சைலொளி பவனே
திரிபுர பவனே திகழொளி பவனே

பரிபுர பவனே பவமொளி பவனே
அரிதிரு மருகா அமரா வதியைக்
காத்துத் தேவர்கள் கடும்சிறை விடுத்தாய்
கந்தா குகனே கதிர்வே லவனே

கார்த்திகை மைந்தா கடம்பா கடம்பனை
இடும்பனை யழித்த இனியவேல் முருகா
தனிகா சலனே சங்கரன் புதல்வா
கதிர்கா மத்துறை கதிர்வேல் முருகா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழநிப் பதிவாழ் பாலகு மாரா
ஆவினன் குடிவாழ் அழகிய வேலா
செந்தின்மா மலையுறும் செங்கல்வ ராயா
சமரா புரிவாழ் சண்முகத் தரசே

காரார் குழலாள் கலைமகள் நன்றாய்
என்நா இருக்க யானுனைப் பாட
எனைத் தொடர்ந்திருக்கும் எந்தை முருகனைப்
பாடினேன் ஆடினேன் பரவச மாக

ஆடினேன் நாடினென் ஆவினன் பூதியை
நேச முடன்யான் நெற்றியில் அணிய
பாச வினைகள் பற்றது நீங்கி
உன்பதம் பெறவே உன்னரு ளாக

அன்புடன் இரட்சி அன்னமுஞ் சொன்னமும்
மெத்தமெத் தாக வேலா யுதனார்
சித்திபெற் றடியேன் சிறப்புடன் வாழ்க
வாழ்க வாழ்க மயிலோன் வாழ்க

வாழ்க வாழ்க வடிவேல் வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குரு வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குற மகளுடன்
வாழ்க வாழ்க வாரணத் துவசம்

வாழ்க வாழ்கஎன் வறுமைகள் நீங்க
எத்தனை குறைகள் எத்தனை பிழைகள்
எத்தனை அடியேன் எத்தனை செயினும்
பெற்றவன் நீகுரு பொறுப்பது உன்கடன்

பெற்றவள் குறமகள் பெற்றவ ளாமே
பிள்ளையென் றன்பாய்ப் பிரிய மளித்து
மைந்தனென் மீதுன் மனமகிழ்ந் தருளித்

தஞ்சமென் றடியார் தழைத்திட அருள்செய்
கந்தர் சஷ்டி கவசம் விரும்பிய
பாலன் தேவ ராயன் பகர்ந்ததைக்
காலையில் மாலையில் கருத்துடன் நாளும்
ஆசா ரத்துடன் அங்கந் துலக்கி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேசமுடன் ஒரு நினைவது வாகிக்
கந்தர் சஷ்டிக் கவசம் இதனைச்
சிந்தை கலங்காது தியானிப் பவர்கள்
ஒருநாள் முப்பத் தாறுருக் கொண்டு

ஓதியே ஜெபித்து உகந்துநீ றணிய
அஷ்டதிக் குள்ளோர் அடங்கலும் வசமாய்த்
திசைமன்ன ரெண்மர் செயலாது அருளுவர்
மாற்றவ ரல்லாம் வந்து வணங்குவர்

நவகோள் மகிழ்ந்து நன்மை யளித்திடும்
நவமதனெனவும் நல்லெழில் பெறுவர்
எந்த நாளும் ஈரெட்டாய் வாழ்வார்
கந்தர்கை வேலாம் கவசத் தடியை

வழியாய்க் காண மெய்யாய் விளங்கும்
விழியாற் காண வெருண்டிடும் பேய்கள்
பொல்லா தவரைப் பொடிபொடி யாக்கும்
நல்லோர் நினைவில் நடனம் புரியும்

சர்வ சத்ரு சங்கா ரத்தடி
அறிந்தென துள்ளம் அஷ்ட லட்சுமிகளில்
வீரலட் சுமிக்கு விருந்துண வாகச்
சூரபத் மாவைத் துணித்தகை யதனால்
இருபத் தேழ்வர்க் குவந்தமு தளித்த

குருபரன் பழநிக் குன்றினி லிருக்கும்
சின்னக் குழந்தை சேவடி போற்றி!
எனைத்தடுத் தாட்கொள என்றன துள்ளம்
மேவிய வடிவுறும் வேலவா போற்றி!

தேவர்கள் சேனா பதியே போற்றி!
குறமகள் மனமகிழ் கோவே போற்றி!
திறமிகு திவ்விய தேகா போற்றி!
இடும்பா யுதனே இடும்பா போற்றி!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடம்பா போற்றி கந்தா போற்றி!
வெட்சி புனையும் வேலே போற்றி!
உயர்கிரி கனக சபைக்கோ ரரசே!
மயில்நட மிடுவோய் மலரடி சரணம்!

சரணம் சரணம் சரவண பவஓம்
சரணம் சரணம் சண்முகா சரணம்!
சரணம் சரணம் சண்முகா சரணம்!

## கேதார கௌரி விரதம்

காப்பெடுக்க வந்தேனே கௌரியம்மாள் தாயாரே
காத்தென்னைத் தேற்றிடுவாய் காளிமகா தேவியரே
காலமெல்லாம் நின்னரிய காப்பெடுத்தே வாழ்ந்திடுவேன்
எண்ணும் கருமம் இனிதாக முடித்திடுவாய்
பண்ணும் வினையாவும் பனிபோலப் போக்கிடுவாய்
உண்ணும் உணவாக உயிரினுக் குயிராக
என்றும் இருந்தே எனைக்காத்து வந்திடுவாய்
காடும் கடந்துவந்தேன் மலையும் கடந்து வந்தேன்
காளிமகா தேவியரே காப்பெனக்குத் தந்திடுவாய்
சூலம் கொண்டவளே சுந்தர முகத்தவளே
அரியை உடையவளே அம்மா காளிதாயே
கொடியமகிஷாசுரனைக் கூறு போட்டவளே
அசுரக் குணம் யாவும் அழிக்கும் சுடர்க்கொடியே
சிவனை நினைத்தல்லோ சீர்விரதம் நீயிருந்தாய்
பரனை நினைத்தல்லோ பதிவிரதம் நீயிருந்தாய்
அரனை நினைத்தல்லோ அம்மாநீ நோன்பிருந்தாய்
சங்கரனை எண்ணியல்லோ சங்கரிநீ நோன்பிருந்தாய்
ஐங்கரனைப் பெற்றவளே அன்றுநீ நோன்பிருந்தாய்
விரதத்தைக் கண்டே விழித்தான் சிவனவனும்
அம்மா உமை அணைத்தே அருள்மாரி பொழிந்தானே
வகையாற்றுப் படலமிதை வழிவழியாக் காட்டிடுவீர்
நெறியறியாத் திகைப்போர்க்கு நெறிமுறையைக் காட்டிடுவாய்
காப்பைப் புனைந்துவிடு காலபயம் ஓட்டிவிடு
நூலைப் புனைந்துவிடு நுண்ணறிவை ஊட்டிவிடு
வல்லமையைத் தந்துவிடு வையகத்தில் வாழவிடு
காளிமகா தேவியரே காப்பருளும் தேவியரே
காப்பைப் புனைபவளே காப்பாய் இருப்பவளே
நாடு செழிக்கவென்றே நற்காப்பு அருளுமம்மா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீடு செழிக்கவென்றே விழைகாப்பு அருளுமம்மா
நல்வாழ்வு வாழ்வதற்கு நறுங்காப்பு அருளுமம்மா
அல்லல் அறுப்பதற்கே அருட்காப்பு அருளுமம்மா
பிள்ளை அற்றவர்க்குப் பெருங்காப்பு அருளுமம்மா
பூமணியே மாமணியே புனிதவதி தாயவளே
நான்விரும்பும் காப்பை நலமுடனே தாருமம்மா
கல்வி சிறப்பதற்குத் கலைமகளே வாருமம்மா
செல்வம் சிறப்பதற்குத் திருமகளே வாருமம்மா
வீரம் சிறப்பதற்கு வீரசக்தி தாருமம்மா

பாட்டுடைத் தலைவியரே பராசக்தி தாயவளே!
ஏட்டுடைத் தலைவியரே எல்லாம்மிகு வல்லபையே
காப்பெடுக்க வந்தேனம்மா கனிவுடனே பாருமம்மா
பால்பழங்கள் வெற்றிலைகள் பல்வகைத் திரவியங்கள்
நானுமக்குத் தாறேனம்மா நயந்தென்னைக் காருமம்மா
காளமகா தேவியரே காசினிக்கு வித்தவளே
வித்தை விதைப்பவளே வினைகாக்கும் காப்பவளே
எத்தால் வாழ்ந்திடுவோம் எல்லாம் உமதருளே
காசினியில் வேற்றுமையை கணபொழுதே மாற்றிவிட்டால்
ஏசலின்றி வாழ்ந்திடுவோம் ஏந்துபுகழ் தேவியளே
காப்பெனக்குப் போட்டுவிட்டால் கல்மனது இளகிவிடும்
ஞானம் பெருகிவரும் நல்வாழ்வு மிகுந்துவரும்
தொடர்ந்து அணிவோர்க்கு தொட்டதெல்லாம் ஜெயமாகும்
இசைந்து அணிவோர்க்கு நினைத்ததெல்லாம் ஈடேறும்
நம்பி அணிவோர்க்கு நல்லதெல்லாம் பெருகிவரும்
நாள்கள் கோள்களெல்லாம் நலமுடனே இணைந்துவரும்
சந்தனச் சாந்தவளே சங்கரியே சாந்தினியே
குங்குமப் பூச்சவளே குலக்கொழுந்தே கௌரியம்மா
காப்புக் கட்டிவிட்டுக் கடமை முடிந்ததென்று
ஏப்பம் மிகவிட்டு என்றுமே இருந்தறியேன்
நாளும் பொழுதிலெல்லாம் நறுங்காப்புக் கட்டதனில்
பூவும் நீருமிட்டுப் போற்றி வணங்கிடுவேன்
காலைப் பொழுதெழுந்து காப்பதனில் விழித்திடுவேன்
ஞானச் செழுஞ்சுடரே காளியுன்னைக் காணுகின்றேன்
காப்பெனக்குக் கையிலுண்டு கடமைகளைச் செய்திடுவேன்
ஏய்ப்பவரைக் கண்டால் எரிமலைபோற் கனன்றிடுவேன்
தீமைச் செயலெதுவும் தெரியாது செய்கையிலே
காப்புக் கையிலிருந்து கண்திறந்து காட்டுமடி
சொல்லற் கரிதான சோதிமிகு காப்பதனை
இருபது நாள்வரையில் இசைவோடு விரதமிரு
பக்தி மனதுடனே பரவி யணிவோர்க்கு
சித்தியெல்லாந்தருவாள் சீர்பெருகு கௌரியவள்
முத்திக்கு வழியுமுண்டு முக்கால உணர்வுமுண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எச்சகத்தி லோர்களெல்லாம் ஏற்றியெமைப் போற்றிடுவர்
சொற்சக்தி பொருட்சக்தி துலங்கி வந்திடவே
அச்சக்தி எல்லாம் அருள்வாள் கௌரியவள்
கௌரிக் காப்பதனைக் காலம் தவறாமல்
முறையாய் அணிந்துவர முன்வினைகள் நீங்கிவர
ஞானம் ஓங்கிவர நல்லறிவு துலங்கிவர
தேவிமகா காளியரே தெவிட்டாத தீங்கனியே
காளியாய் வந்தமர்ந்த கௌரியே காப்பருளும்

ஓம் சக்தி ஓம்
திருச்சிற்றம்பலம்

# விநாயகர்அகவல்



விநாயகர் அகவல்

பாலும் தெளிதேனும் பாகும் பருப்புமிவை
நாலும் கலந்துனக்கு நான் தருவேன் -கோலம்செய்
துங்கக் கரிமுகத்துத் தூமணியே நீயெனக்குச்
சங்கத் தமிழ் மூன்றும் தா .

அகவல்
சீதக் களபச் செந்தா மரைப்பூம்
பாதச் சிலம்பு பலவிசை பாடப்
பொன்னரை ஞாணும் பூந்துகில் ஆடையும்
வன்னமருங்கில் வளர்ந்தழ கெறிப்பப்
பேழை வயிறும் பெரும்பாரக் கோடும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேழ முகமும் விளங்குசிந் தூரமும்
அஞ்சு கரமும் அங்குச பாசமும்
நெஞ்சிற் குடிகொண்ட நீல மேனியும்
நான்ற வாயும் நாலிரு புயமும்
மூன்று கண்ணும் மும்மதச் சுவடும்

இரண்டு செவியும் இலங்குபொன் முடியும்
திரண்டமுப் புரிநூல் திகழொளி மார்பும்
சொற்பதம் கடந்த துரியமெய்ஞ் ஞான
அற்புதம் நிறைந்த கற்பகக் களிறே!
முப்பழ நுகரும் மூஷிக வாகன!

இப்பொழு தென்னை ஆட்கொள வேண்டித்
தாயா யெனக்குத் தானெழுந் தருளி
மாயாப் பிறவி மயக்கம் அறுத்துத்
திருந்திய முதலைந் தெழுத்தும் தெளிவாய்ப்
பொருந்தவே வந்தென் உளந்தனில் புகுந்து

குருவடி வாகிக் குவலயந் தன்னில்
திருவடி வைத்துத் திறமிது பொருளென
வாடா வகைதான் மகிழ்ந்தெனக் கருளிக்
கோடா யுதத்தால் கொடுவினை களைந்தே
உவட்டா உபதேசம் புகட்டியென் செவியில்

தெவிட்டாத ஞானத் தெளிவையும் காட்டி
ஐம்புலன் தன்னை அடக்கும் உபாயம்
இன்புறு கருணையின் இனிதெனக் கருளிக்
கருவிக ளொடுங்கும் கருத்தினை யறிவித்(து)
இருவினை தன்னை அறுத்திருள் கடிந்து

தலமொரு நான்கும் தந்தெனக் கருளி
மலமொரு மூன்றின் மயக்கம் அறுத்தே
ஒன்பது வாயில் ஒருமந் திரத்தால்
ஐம்புலக் கதவை அடைப்பதும் காட்டி
ஆறா தாரத்(து) அங்குச நிலையும்

பேறா நிறுத்திப் பேச்சுரை யறுத்தே
இடைபிங் கலையின் எழுத்தறி வித்துக்
கடையிற் சுழுமுனைக் கபாலமும் காட்டி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூன்றுமண் டலத்தின் முட்டிய தூணின்
நான்றெழு பாம்பின் நாவில் உணர்த்திக்

குண்டலி யதனிற் கூடிய அசபை
விண்டெழு மந்திரம் வெளிப்பட உரைத்து
மூலா தாரத்தின் மூண்டெழு கனலைக்
காலால் எழுப்பும் கருத்தறி வித்தே
அமுத நிலையும் ஆதித்தன் இயக்கமும்

குமுத சகாயன் குணத்தையும் கூறி
இடைச்சக் கரத்தின் ஈரெட்டு நிலையும்
உடல்சக் கரத்தின் உறுப்பையும் காட்டிச்
சண்முக தூலமும் சதுர்முக சூக்கமும்
எண் முகமாக இனிதெனக் கருளிப்

புரியட்ட காயம் புலப்பட எனக்குத்
தெரியெட்டு நிலையும் தெரிசனப் படுத்திக்
கருத்தினில் கபால வாயில் காட்டி
இருத்தி முத்தி யினிதெனக் கருளி
என்னை யறிவித்(து) எனக்கருள் செய்து

முன்னை வினையின் முதலைக் களைந்து
வாக்கும் மனமும் இல்லா மனோலயம்
தேக்கியே யென்றன் சிந்தை தெளிவித்(து)
இருள்வெளி யிரண்டுக்(கு) ஒன்றிடம் என்ன
அருள்தரும் ஆனந்தத்(து) அழுத்தியென் செவியில்
எல்லை யில்லா ஆனந் தம்அளித்(து)
அல்லல் களைந்தே அருள்வழி காட்டிச்
சத்தத்தின் உள்ளே சதாசிவம் காட்டிச்
சித்தத்தின் உள்ளே சிவலிங்கம் காட்டி
அணுவிற்(கு) அணுவாய் அப்பாலுக்(கு) அப்பாலாய்க்

கணுமுற்றி நின்ற கரும்புள்ளே காட்டி
வேடமும் நீறும் விளங்க நிறுத்திக்
கூடுமெய்த் தொண்டர் குழாத்துடன் கூட்டி
அஞ்சக் கரத்தின் அரும்பொருள் தன்னை
நெஞ்சக் கருத்தின் நிலையறி வித்துத்
தத்துவ நிலையைத் தந்தெனை யாண்ட
வித்தக விநாயக விரைகழல் சரணே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காரியசித்திமாலை

பந்தம்அகற்றும்அநந்தகுணப்பரப்பும்எவன்பால்உதிக்குமோ
எந்தஉலகும்எவனிடத்தில்ஈண்டிஇருந்துகரக்குமோ
சந்தமறைஆகமங்கலைகள்அனைத்தும்எவன்பால்தகவருமோ
அந்தஇறையாம்கணபதியைகூரத்தொழுகின்றோம்.

உலகமுழுவதும்நீக்கமறஒன்றாய்நிற்கும்பொருள்எவன்அவ்
உலகிற்பிறக்கும்விவகாரங்கள்உறாதமேலாம்ஒளியாவன்?
உலகம்புரியும்வினைப்பயனைஊட்டும்களைகண்எவன்அந்த
உலகமுதலைக்கணபதியைஉவந்துசரணம்அடைகின்றோம்.

இடர்கள்முழுதும்எவனருளால்எரிவீழும்பஞ்செனமாயும்
தொடரும்உயிர்கள்எவனருளால்சுரர்வாழ்பதியும்உறச்செய்யும்
கடவுள்முதலோர்க்குஊறின்றிகருமம்எவனால்முடிவுறும்அத்
தடவுமருப்புக்கணபதிபொன்சரணம்அடைகின்றோம்.

மூர்த்தியாகித்தலமாகிமுந்நீர்கங்கைமுதலான
தீர்த்தமாகிஅறிந்தறியாத்திறத்தினாலும்உயிர்க்குநலம்
ஆர்த்திநாளும்அறியாமைஅகற்றிஅறிவிப்பான்எவன்அப்
போர்த்தகருணைக்கணபதியைப்புகழ்ந்துசரணம்அடைகின்றோம்.

செய்யும்வினையின்முதல்யாவன்செய்யப்படும்அப்பொருள்யாவன்
ஐயமின்றிஉளதாகும்அந்தக்கருமப்பயன்யாவன்
உய்யும்வினையின்பயன்விளைவில்ஊட்டிவிடுப்பான்எவன்அந்தப்
பொய்யிஇறையைக்கணபதியைப்புரிந்துசரணம்அடைகின்றோம்.

வேதம்அளந்தும்அறிவரியவிகிர்தன்யாவன்விழுத்தகைய
வேதமுடிவில்நடம்நவிலும்விமலன்யாவன்விளங்குபர
நாதமுடிவில்வீற்றிருக்கும்நாதன்எவன்எண்குணன்எவன்அப்
போதமுதலைக்கணபதியைப்புகழ்ந்துசரணம்அடைகின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண்ணின்ஓர்ஐங்குணமாகிவதிவான்எவன்நீரிடைநான்காய்
நண்ணிஅமர்வான்எவன்தீயின்மூன்றாய்நவில்வான்எவன்வளியின்
எண்ணும்இரண்டுகுணமாகிஇயைவான்எவன்வானிடைஒன்றாம்
அண்ணல்எவன்அக்கணபதியைஅன்பிற்சரணம்அடைகின்றோம்.

பாசஅறிவில்பசுஅறிவில்பற்றற்கரியபரன்யாவன்
பாசஅறிவும்பசுஅறிவும்பயிலப்பணிக்கும்அவன்யாவன்
பாசஅறிவும்பசுஅறிவும்பாற்றிமேலாம்அறிவான
தேசன்எவன்அக்கணபதியைத்திகழச்சரணம்அடைகின்றோம்.

நூற்பயன்

இந்தநமதுதோத்திரத்தையாவன்மூன்றுதினமும்உம்மைச்
சந்திகளில்தோத்திரஞ்செயினும்சகலகருமசித்திபெறும்
சிந்தைமகிழச்சுகம்பெறும்எண்தினம்உச்சரிக்கின்சதுர்த்தியிடைப்
பந்தம்அகலஓர்எண்கால்படிக்கில்அட்டசித்தியுறும்.
திங்கள்இரண்டுதினந்தோறும்திகழஒருபான்முறையோதில்
தங்கும்அரசவசியமாம்தயங்கஇருபத்தொருமுறைமை
பொங்கும்உழுவலால்கிளப்பின்பொருவின்மைந்தர்விழுக்கல்வி
துங்கவெறுக்கைமுதற்பலவும்தோன்றும்எனச்செப்பினர்மறைந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சகலகலாவல்லி மாலை

வெண்டா மரைக்கன்றி நின்பதந் தாங்கவென் வெள்ளையுள்ளத்
தண்டா மரைக்குத் தகாதுகொ லோசக மேழுமளித்
துண்டா னுறங்க வொழித்தான்பித் தாகவுண் டாக்கும்வண்ணம்
கண்டான் சுவைகொள் கரும்பே சகல கலாவல்லியே.

நாடும் பொருட்சுவை சொற்சுவை தோய்தர நாற்கவியும்
பாடும் பணியிற் பணித்தருள் வாய்பங்க யாசனத்திற்
கூடும் பசும்பொற் கொடியே கனதனக் குன்றுமைம்பாற்
காடுஞ் சுமக்குங் கரும்பே சகல கலாவல்லியே.

அளிக்குஞ் செழுந்தமிழ்த் தெள்ளமு தார்ந்துன் னருட்கடலிற்
குளிக்கும் படிக்கென்று கூடுங்கொ லோவுளங் கொண்டுதெள்ளித்
தெளிக்கும் பனுவற் புலவோர் கவிமழை சிந்தக்கண்டு
களிக்குங் கலாப மயிலே சகல கலாவல்லியே.

தூக்கும் பனுவற் துறைதோய்ந்த கல்வியுஞ் சொற்சுவைதோய்
வாக்கும் பெருகப் பணித்தருள் வாய்வட நூற்கடலும்
தேக்குஞ் செழுந்தமிழ்ச் செல்வமுந் தொண்டர்செந் நாவினின்று
காக்குங் கருணைக் கடலே சகல கலாவல்லியே.

பஞ்சப் பிதந்தரு செய்யபொற் பாதபங் கேருகமென்
நெஞ்சத் தடத்தல ராததென் னேநெடுந் தாட்கமலத்
தஞ்சத் துவச முயர்த்தோன்செந் நாவு மகமும்வெள்ளைக்
கஞ்சத் தவிசொத் திருந்தாய் சகல கலாவல்லியே.

பண்ணும் பரதமுங் கல்வியுந் தீஞ்சொற் பனுவலும்யான்
எண்ணும் பொழுதெளி தெய்தநல் காயெழு தாமறையும்
விண்ணும் புவியும் புனலுங் கனலும்வெங் காலுமன்பாடி
கண்ணுங் கருத்து நிறைந்தாய் சகல கலாவல்லியே.

பாட்டும் பொருளும் பொருளாற் பொருந்தும் பயனுமென்பாற்
கூட்டும் படிநின் கடைக்கணல் காயுளங் கொண்டுதொண்டர்
தீட்டுங் கலைத்தமிழ்த் தீம்பா லமுதந் தெளிக்கும்வண்ணம்
காட்டும்வெள் ளோதிமப் பேடே சகல கலாவல்லியே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்விற் பனமு மவதான முங்கவி சொல்லவல்ல
நல்வித்தை யுந்தந் தடிமைகொள் வாய்நளி னாசனஞ்சேர்
செல்விக் கரிதென் றொருகால முஞ்சிதை யாமைநல்கும்
கல்விப் பெருஞ்செல்வப் பேறே சகல கலாவல்லியே.

சொற்கும் பொருட்கு முயிராமெய்ஞ் ஞானத்தின் தோற்றமென்ன
நிற்கின்ற நின்னை நினைப்பவர் யார்நிலந் தோய்புழைக்கை
நற்குஞ் சரத்தின் பிடியோ டரசன்ன நாணநடை
கற்கும் பதாம்புயத் தாயே சகல கலாவல்லியே.

மண்கண்ட வெண்குடைக் கீழாக மேற்பட்ட மன்னருமென்
பண்கண் டளவிற் பணியச்செய் வாய்படைப் போன்முதலாம்
விண்கண்ட தெய்வம்பல் கோடியுண்டேனும் விளம்பிலுன்போற்
கண்கண்ட தெய்வ முளதோ சகல கலாவல்லியே. **1**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனமார்ந்த நன்றிகள்

எம் குடும்பத்தலைவரின் பிரிவுச்செய்தி அறிந்தவுடன் ஓடோடி வந்து உள்ளம் கசிந்து துயர்பகிர்ந்த அன்புள்ளங்கள் அத்தனை பேருக்கும் நினைவழியா நன்றிகளை நெஞ்சில் நிறுத்தி சிரம்தாழ்த்தி வணங்குகின்றோம்.

அன்பால் அரவணைப்பால், அனுதாபங்களால் ஆறுதலளித்து முகநூல், தொலைபேசி, கண்ணீர் அஞ்சலிகள், மலர்வளையம், உண்டி அளித்து உறவோடு தந்தவர்கள் துயர் பகிரும் பதாதைகள் வெளியிட்டோர் இன்றுவரை நடைபெற்ற வீட்டுக்கிரியை இறுதிக்கிரியைகளில் நேர்த்தியாய் வந்துதவி நெஞ்சங்கள் ஈர்ந்திட்ட அனைத்தன்பு நெஞ்சங்கள் உற்றார். உறவுகள், சுற்றத்தார் எல்லோருக்கும் இணைந்தன்பாய் கரம் கோர்த்து இதயத்தால் நன்றி சொன்னோம்.

அன்புடன்
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்
ஓம் சாந்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குணரத்தினம் + நல்லம்மா

திரவியமலர் (அமரர்)
குணபாலசிங்கம் (அமரர்)
சண்முகலிங்கம் (அமரர்)
ஞானமலர் (அமரர்)
கணேசலிங்கம்
அமுதலிங்கம்
சுந்தரலிங்கம்
ஜெயமலர்
யோகலிங்கம்
வன்னியசிங்கம்
அன்புமலர்
பஞ்சலிங்கம்
இராசமலர்
சந்திரமதி

கந்தவனம் + பூரணம்

அன்னலிங்கம் (அமரர்)
மனோகரலிங்கம் (அமரர்)
சுந்தரலிங்கம் (அமரர்)
கனகலிங்கம்
ரதிமலர் (அமரர்)
அற்புதமலர்
கிளி
வசந்தாதேவி
லலிதா (அமரர்)
தர்மகுலசிங்கம் (அமரர்)

குணபாலசிங்கம் + ரதிமலர்

டெய்சிமலர் + ஆனந்தராஜன்

ஆரீஸ்
ஆருஜன்
ஆரவின்
ஆருஸ்
ஆரித்

கார்த்திகா + ஹரிகரன்

ஜாதவன்
பூர்ணிஜா

குணராஜ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆத்திசூடி

01. அறஞ்செய விரும்பு
02. ஆறுவது சினம்
03. இயல்வது கரவேல்
04. ஈவது விலக்கேல்
05. உடையது விளம்பேல்
06. ஊக்கமது கைவிடேல்
07. எண் எழுத்து இகழேல்
08. ஏற்பது இகழ்ச்சி
09. ஐயம் இட்டு உண்
10. ஒப்புரவு ஒழுகு
11. ஓதுவது ஒழியேல்
12. ஔவியம் பேசேல்
13. அஃகஞ் சுருக்கேல்
14. கண்டு ஒன்று சொல்லேல்
15. ஙப்போல் வளை
16. சனி நீராடு
17. ஞயம்பட உரை
18. இடம்பட வீடு எடேல்
19. இணக்கம் அறிந்து இணங்கு
20. தந்தை தாய் பேண்
21. நன்றி மறவேல்
22. பருவத்தே பயிர் செய்
23. மன்று பறித்து உண்ணேல்
24. இயல்பலாதன செயேல்
25. அரவம் ஆடேல்
26. இலவம் பஞ்சில் துயில்
27. வஞ்சகம் பேசேல்
28. அழகு அலாதன செயேல்
29. இளமையில் கல்
30. அரனை மறவேல்
31. அனந்தல் ஆடேல்
32. கடிவது மற
33. காப்பது விரதம்
34. கிழமைப் படவாழ்
35. கீழ்மை அகற்று
36. குணமது கைவிடேல்
37. கூடிப் பிரியேல்
38. கெடுப்பது ஒழி
39. கேள்வி முயல்
40. கைவினை கரவேல்
41. கொள்ளை விரும்பேல்
42. கோதாட்டு ஒழி
43. சக்கர நெறி நில்
44. சான்றோர் இனத்திரு
45. சித்திரம் பேசேல்
46. சீர்மை மறவேல்
47. சுளிக்கச் சொல்லேல்
48. சூது விரும்பேல்
49. செய்வன திருந்தச் செய்
50. சேரிடம் அறிந்து சேர்
51. சை எனத் திரியேல்
52. சொல் சோர்வு படேல்
53. சோம்பித் திரியேல்
54. தக்கோன் எனத்திரி
55. தாகமது விரும்பு
56. திருமாலுக்கு அடிமை செய்
57. தீவினை அகற்று
58. துன்பத்திற்கு இடம் கொடேல்
59. தூக்கி வினை செய்
60. தெய்வம் இகழேல்
61. தேசத்தோடு ஒத்து வாழ்
62. தையல் சொல் கேளேல்
63. தொன்மை மறவேல்
64. தோற்பன தொடரேல்
65. நன்மை கடைப்பிடி
66. நாடு ஒப்பன செய்
67. நிலையிற் பிரியேல்
68. நீர்விளை யாடேல்
69. நுண்மை நுகரேல்
70. நூல் பல கல்
71. நெற்பயிர் விளை
72. நேர்பட ஒழுகு
73. நைவினை நணுகேல்
74. நொய்ய உரையேல்
75. நோய்க்கு இடம் கொடேல்
76. பழிப்பன, பகரேல்
77. பாம்பொடு பழகேல்
78. பிழைபடச் சொல்லேல்
79. பீடு பெற நில்
80. புகழ்ந்தாரைப் போற்றி வாழ்



81. பூமி திருத்தி உண்
82. பெரியாரைத் துணைக்கொள்
83. பேதை அகற்று
84. மையலோடு இணங்கேல்
85. பொருள்தனைப் போற்றி வாழ்
86. போர்த் தொழில் புரியேல்
87. மனம் தடுமாறேல்
88. மாற்றானுக்கு இடம் கொடேல்
89. மிகைபடச் சொல்லேல்
90. மீதூண் விரும்பேல்
91. முனைமுகத்து நில்லேல்
92. மூர்க்கரோடு இணங்கேல்
93. மெல்லினல்லாள் தோள் சேர்
94. மேன்மக்கள் சொல் கேள்
95. மை விழியார் மனை அகல்
96. மொழிவது அறமொழி
97. மோகத்தை முனி
98. வல்லமை பேசேல்
99. வாது முற்கூறேல்
100. வித்தை விரும்பு
101. வீடுபெற நில்
102. உத்தமனாய் இரு
103. ஊருடன் கூடி வாழ்
104. வெட்டெனப் பேசேல்
105. வேண்டி வனை செய்யேல்
106. வைகறைத் துயில் எழு
107. ஒன்னாரைத் தேறல்
108. ஓரம் சொல்லேல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூரியன் பதிப்பகம் திருநகர் வீதி கிளிநொச்சி. T.P 0772882142